கற்றலுக்குப் பாதை அமைப்போம்

# முன்னேறுவோம்

# தமிழ்

## TAMIL

வகுப்பு ⑧

மாநிலக் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (SCERT), கேரளம்.

## முன்னுரை

2019 முதல் 2021 வரையிலான கோவிட் பெருந்தொற்றின் காரணமாக உருவான சூழ்நிலையால் மாணவர்களுக்கு நேரடிக் கல்வி முழுமையாகக் கிடைக்கவில்லை. மாணவர்களின் கற்றலில் சில இடைவெளிகள் இருப்பதாக 2022 இல் நடைபெற்ற முதல் பருவத்தேர்வுத் தாள்களை மதிப்பீடு செய்தபோதும், ஆசிரியர்கள் தங்கள் அனுபவங்களைப் பகிர்ந்துகொண்டபோதும் தெரிய வந்தது. முன் வகுப்புகளில் கிடைக்கவேண்டியிருந்த சில கருத்துகள் மாணவர்களுக்கு மீண்டும் கிடைப்பதற்கும் தொடர்கல்வியை உறுதிப்படுத்துவதற்கும் உதவுகின்ற செயல்பாடுகளை உட்படுத்தி ஒரு சிறுநூல் உருவாக்கி வழங்க உள்ளோம். மாணவர்களுக்கு ஏற்பட்ட கற்றல் இடைவெளிக்குத் தீர்வுகாணும் வகையில் தேவையான விளக்கங்களும் செயல்பாடுகளும் இந்நூலில் உட்படுத்தப்படுள்ளன. மாணவர்கள் சுய கற்றல் அல்லது ஆசிரியர்களின் உதவியுடன் இச் செயல்பட்டு நூலைப் பயன்படுத்தித் தொடர்கல்வியில் நன்னம்பிக்கையோடு முன்னேற இயலட்டும்; வாழ்த்துகள்.

**இயக்குநர்**

எஸ்.ஸி.இ.ஆர்.டி

# உள்ளடக்கம்


- சிறுகுறிப்பு
- சுவரொட்டி
- அறிவிப்பு
- துண்டுப்பிரசுரம்
- தன்விவரப்பட்டியல்
- இரசனைக் குறிப்பு
- நூலடைவு
- கட்டுரை
- விமர்சனம்
- சொற்பொழிவு

# சிறுகுறிப்பு

ஒரு பொருள் பற்றிய விரிவான செய்திகள் காணப்படும் நிலையில், அதன் முக்கிய கருத்துக்களை மட்டும் குறிப்பாக எழுதுதல்

சிறுகுறிப்பு அமையும் முறை

- ஒரு பொருள் குறித்த விளக்கமான செய்திகளை வாசித்து சுருங்கச் சொல்லும் முறையாக அமையும்.
- செய்யுளோ, நாட்டுப்புற பாடல்களோ இருக்கின்ற சூழலில் அதன் முழுக் கருத்துக்களையும் உட்கொண்டு அவற்றின் மையப்பொருளைச் சுருக்கமாகவும் தெளிவாகவும் எழுதும் முறையாக அமையும்.

" வெள்ளிக் கலப்பை கொண்டு
விடிகாலம் ஏர்பூட்டி
தங்கக் கலப்பைக் கொண்டு
தரிசுழுகப் போனாராம்
மாம்பழத்தைக் கீறி
வயலுக்கு உரம்போட்டு
தேன்பாய்ந்து நெல்விளையும்
செல்வமுளார் புத்திரனோ
சம்பா விதைபாவி
கருகுச் சம்பா நாத்துவிட்டு
பிடித்து விதை பாவி
கோபுரம்போல் போர் ஏறும்
கட்டுக் கலம்காணும்
கதிர் உழக்கு நெல் காணும்
அடித்துப் பொலிதூற்ற

அதுவும் கலம் காணும்
பொன் சுளகு கொண்டு
பொதிதூற்றி நிற்பாராம்
பொன்மரக்கால் கொண்டு
பொதியளந்து நிற்பாராம்"

மேற்கண்ட பாடலில் உள்ள உழவுத்தொழில் தொடர்பான செய்திகளைச் சிறுகுறிப்பாக எழுதுவோம்.

<u>உழவுத்தொழில்</u>

தரிசு நிலத்தைக் கலப்பையால் நன்கு உழ வேண்டும். நெல்லினை முளைக்க வைத்து பாவி, நாற்றாக்கி பின் நாற்றினை நட வேண்டும். நாற்றிற்கு முறையாக நீர்ப்பாய்ச்சி, உரமிட வேண்டும். நெற்கதிர் நன்றாக விளைந்து முற்றியவுடன் முற்றிய கதிரை அறுத்து கட்டாகக் கட்டி, களத்திற்குக் கொண்டு வந்து அடிக்க வேண்டும். பின்பு வைக்கோலைப் போராக்கி, நெல்லினை அளந்து, மூட்டையாக்க வேண்டும்.

குறிப்புகளைப் பயன்படுத்தி நாட்டுப்புற மருத்துவம் குறித்துச் சிறுகுறிப்பு எழுதுவோம்.

குறிப்புகள் : பக்கவிளைவு ஏற்படுத்தாது - நோய்களை முற்றிலுமாகக் குணப்படுத்தும் - எளிதில் கிடைக்கும் - பாரம்பரிய உணவோடு இணைந்தது

<u>நாட்டுப்புற மருத்துவம்</u>

தொடர் செயல்பாடு

➔ கேளப்பன் அவர்களைக் கேரள காந்தி எனக் குறிப்பிடுவதற்கான காரணங்களைச் சிறுகுறிப்பாக எழுதுவோம்.

| <u>கேரள காந்தி</u> |
|---|
| |

எழுதிய சிறுகுறிப்புகளைக் குழுவில் கலந்துரையாடி மேம்படுத்தி படைப்புத் தொகுப்பில் உட்படுத்துவோம்.

# சுவரொட்டி

சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் முறையே சுவரொட்டி ஆகும். ஒரு நிகழ்வை மற்றவர்களுக்கு அறிவிக்கவே பெரும்பாலும் சுவரொட்டி தயாரிக்கப்படுகிறது.

சுவரொட்டி அமையும் முறை

- நடைபெறும் நிகழ்ச்சிக்கு ஏற்ற தலைப்பு இடம்பெற வேண்டும்.
- நிகழ்ச்சிக்கு வருகை தரும் சிறப்பு விருந்தினரின் பெயர் இடம்பெறவேண்டும். மேலும் கலை நிகழ்ச்சிகள் நடைபெறும் எனில் அந்நிகழ்ச்சிகளின் பெயர்கள் குறிப்பிடப்பட வேண்டும்.
- இடம், நாள், நேரம் போன்றவற்றைக் குறிப்பிட வேண்டும்.

- உங்கள் பள்ளியில் சுதந்திரத் தினத்தன்று விடுதலைப் போராட்ட வீரர்களின் தியாகச் செயலைப் போற்றுமாறு கருத்தரங்கம் ஒன்று நடைபெற உள்ளது. இதில் சட்டமன்றத் தலைவர் பங்குபெற்று, கருத்தரங்கைத் தொடங்கி வைக்கவுள்ளார். இதற்கான மாதிரி சுவரொட்டி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

## கருத்தரங்கம்

தலைப்பு : 'விடுதலைப் போராட்ட வீரர்களின் தியாகச் செயல்கள்'

இடம்: அரசு மேல்நிலைப்பள்ளி, நெடும்பாறை, கொல்லம்

நாள்: 15/08/2022 நேரம்: காலை 10.00 மணி

சிறப்பு விருந்தினர்

மாண்புமிகு. **வழக்குரைஞர். ஏ. என். சம்சீர்** அவர்கள்

(சட்டமன்றத் தலைவர், கேரளா)

அனைவரும் வருக! கருத்தரங்கைச் சிறப்பிக்க!

- நமது பள்ளியில் ஜூன் 05 ஆம் தேதி சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு "பருவநிலை மாற்றம்" என்னும் தலைப்பில் சுற்றுச்சூழல் விழிப்புணர்வு முகாம் நடைபெறுகிறது, இந்நிகழ்வை வேளாண் விஞ்ஞானி முருகேசன் அவர்கள் தொடங்கி வைக்கவுள்ளார். இதற்கான சுவரொட்டி தயார் செய்வோம்.

சுற்றுச்சூழல் விழிப்புணர்வு முகாம்

- போதை ஒழிப்பு, மாசடைதல், தண்ணீர் சேமிப்பு, காடுகளைப் பாதுகாத்தல் போன்ற கருத்துகளின் அடிப்படையில் சுவரொட்டிகள் தயார் செய்வோம்.

- தயார் செய்த சுவரொட்டிகளைக் குழுவில் கலந்துரையாடி மேம்படுத்தி வகுப்பறையில் வெளியிடுவோம். படைப்புத் தொகுப்பில் உட்படுத்துவோம்.

# அறிவிப்பு

ஒரு நிகழ்விற்கான அறிவிப்பு அனைவருக்கும் தெரிவிக்கும் விதமாக அமைவதாகும். இதனைத் தெளிவாக அமைக்கும் முறையினை அறிந்திருப்பது அவசியமாகும். அறிவிப்பைக் கண்டவுடன் அந்நிகழ்ச்சியின் முழு வடிவத்தையும் உணர்ந்துகொள்ளும் விதமாக அமைப்பது முக்கியம்.

அறிவிப்பில் இடம்பெற வேண்டிய தகவல்கள்

- மையப்பொருளின் அடிப்படையில் அமைந்த தலைப்பு, நாள், இடம், நேரம் போன்றவை குறிப்பிட வேண்டும்.
- நிகழ்ச்சியில் கலந்து கொள்ளும் சிறப்பு விருந்தினரின் பெயர், அவரின் பணி அல்லது பதவி இவற்றைக் குறிப்பிட வேண்டும்.
- நிகழ்ச்சிநிரல் கொடுப்பது மிகச் சிறப்பாகும்.

  - பள்ளி இலக்கிய மன்றம் சார்பில் கவியரங்கம் நடைபெறவுள்ளது. கவியரசு வைரமுத்து அவர்கள் தலைமை தாங்கும் இந்நிகழ்ச்சிக்கான மாதிரி அறிவிப்பு கீழே தரப்பட்டுள்ளது.

## கவியரங்கம்

அன்புடையீர்,

வணக்கம். கூவக்காடு, அரசு உயர்நிலைப் பள்ளியில் பள்ளி இலக்கிய மன்றத்தின் சார்பில் 25-10-2022 அன்று காலை 10.00 மணிக்கு கவியரங்கம் நடைபெற இருக்கிறது இந்நிகழ்ச்சியில் அனைவரும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

### கவியரங்கத் தலைப்பு

தமிழுக்கு அழகு செய்வது

இயல் தமிழே! இசைத்தமிழே! நாடகத்தமிழே!

## நிகழ்ச்சி நிரல்

இறை வணக்கம் : மாணவர்கள்
வரவேற்புரை : தலைமை ஆசிரியர்

பங்கு பெறுவோர்

| | | |
|---|---|---|
| கவிஞர் வைரமுத்து | : | கவியரங்க ஒருங்கிணைப்பாளர் |
| கவிஞர் முத்துக்குமார் | : | தமிழுக்கு அழகு செய்வது இயல் தமிழே! |
| கவிஞர் கண்ணன் | : | தமிழுக்கு அழகு செய்வது இசைத்தமிழே! |
| கவிஞர் அப்துல் இரகுமான் | : | தமிழுக்கு அழகு செய்வது நாடகத்தமிழே! |
| நன்றியுரை | : | இலக்கிய மன்றத் தலைவர் |

இடம்
நாள்

இப்படிக்கு,
பள்ளி இலக்கிய மன்றத் தலைவர்

- நம் பள்ளிக் கலைவிழா நவம்பர் 2 ஆம் தேதி பள்ளிக் கலையரங்கில் வைத்து நடைபெற உள்ளது. நமது கல்வியமைச்சர் மாண்புமிகு சிவன்குட்டி அவர்கள் தொடங்கி வைத்துச் சிறப்புரை ஆற்றுகிறார். மாணவிகளின் இறைவணக்கத்துடன் ஆரம்பமாகும் இவ்விழாவில் தலைமை ஆசிரியர் வரவேற்புரை கூற மாணவர் தலைவர் நன்றியுரை கூறுகிறார். பள்ளி மாணவர்களின் கலைநிகழ்ச்சிகளும் நடைபெறும். இதனைப் பொதுமக்களுக்குத் தெரிவிக்கும் வகையில் அறிவிப்பு தயார் செய்வோம்

பள்ளிக் கலைவிழா

நிகழ்ச்சி நிரல்

- தயார் செய்த அறிவிப்பினைக் குழுவில் கலந்துரையாடி மேம்படுத்தி வகுப்பறையில் வெளியிட்டு படைப்புத்தொகுப்பில் இணைப்போம்.

# துண்டுப்பிரசுரம்

ஒரு கருத்தினைப் பொதுமக்களுக்கு உணர்த்தும் நோக்கில் சுருக்கமான முறையில் கூறுகின்ற மொழிவடிவமே துண்டுப்பிரசுரம்.

துண்டுப்பிரசுரத்தில் இடம்பெற வேண்டிய தகவல்கள்

- கொடுக்கப்பட்டிருக்கும் அல்லது கூறவிருக்கும் பொருண்மைக்கு ஏற்ப பொதுத்தலைப்பு நல்க வேண்டும்.
- தேவையற்ற விரிவான விளக்கங்கள், கருத்துகள் இடம்பெறுதல் கூடாது.
- துண்டுப்பிரசுரத்தின் அடியில் துண்டுப்பிரசுரத்தை வெளியிடும் மன்றமோ, அமைப்போ எதுவாயினும் அதன் பெயர் கொடுக்க வேண்டும்.
- நிகழ்ச்சி, தேதி, இடம், நேரம் போன்றவை இடம்பெறுதல் கூடாது.
- விழிப்புணர்வு ஏற்படுத்தவோ, கொள்கையினை விளக்கவோ, முக்கிய செய்திகளையோ குறிக்கும் வகையில் துண்டுப்பிரசுரம் வெளியிடுவதால், சிறப்பு விருந்தினர், நிகழ்ச்சி நிரல் போன்ற தகவல்கள் இடம்பெறாது.
- முத்திரை வாக்கியம் போன்று கருத்துக்களை எளிமையாக விளக்கும் தொடர்கள் இடம்பெறலாம்.

    - நமது சுற்றுப்புறத்திலுள்ள மூலிகைச் செடிகளைப் பாதுகாக்க பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் துண்டுப்பிரசுரம் தயார் செய்வோம்.

மூலிகைச் செடிகளைப் பாதுகாப்போம்! பயன்படுத்துவோம்!

அன்புடையீர்,

இயற்கை அறிந்தோ, அறியாமலோ பலவிதமான உதவிகளை நமக்குச் செய்து வருகின்றது. நம் சுற்றுப்புறத்துலுள்ள மூலிகைகள் பல்வேறு வகையான நோய்களைக் குணப்படுத்தும் மருந்துகளாக உள்ளன. அவற்றின் குணநலன்களை உணராமல் பல்வேறு முறையில் அதனை அழித்து வருகின்றோம். நம்மிடம் உள்ள இயற்கை மருத்துவத்தை விடுத்து ஆங்கில மருத்துவத்தை நாடி பல்வேறு புதியவகை நோய்களுக்கு ஆளாகின்றோம். நம் பகுதியிலுள்ள மூலிகையின் மருத்துவப் பயன்பாட்டை அறிந்து, அதனைப் பாதுகாக்க வேண்டும்.

இப்படிக்கு,<br>
பள்ளிப் பசுமை மன்றம்

- உலகில் மிகப்பெரிய மக்களாட்சி முறையைக் கொண்ட ஜனநாயக நாடு இந்தியா. வாக்களிப்பது நம் ஒவ்வொருவரின் முக்கிய கடமையாகும். இதனடிப்படையில் வாக்களிப்பின் முக்கியத்துவத்தை பொதுமக்களிடையே ஏற்படுத்தும் நோக்கில் துண்டுப்பிரசுரம் தயாரிப்போம்.

| |
|---|
| அனைவரும் வாக்களிப்பீர்!! |
| அன்புடையீர், |
| இடம்          இப்படிக்கு |
| தேதி          சமூக அறிவியல் மன்றம் |

- தயார் செய்த துண்டுப் பிரசுரத்தைக் குழுவில் கலந்துரையாடி மேம்படுத்தி வகுப்பறையில் வெளியிட்டு படைப்புத்தொகுப்பில் இணைப்போம்.

# தன்விவரப்பட்டியல்

தன்விவரப்பட்டியல் என்பது ஒருவரின் விவரங்களை முறைப்படுத்திக் கூறும் வடிவமாகும்.

தன்விவரப் பட்டியலில் இடம்பெற வேண்டிய தகவல்கள்

- வாழ்க்கைக் குறிப்பினை அடிப்படையாகக் கொண்டு தன்விவரப்பட்டியல் தயாரிக்க வேண்டும்.
- பெயர், பிறந்தத் தேதி, பெற்றோர், முகவரி, பணியின் பெயர், எழுதிய நூல்கள், விருதுகள் போன்ற அமைப்பு முறையில் அமைவது சிறப்பானது ஆகும்.
- கவியரசர். கண்ணதாசன் அவர்கள் ஜூன் 24 ஆம் தேதி 1927 இல் பிறந்தார். இவரின் தந்தை சாத்தப்பனார். தாய் விசாலாட்சி . தமிழகத்தில் சிவகங்கை மாவட்டம் சிறுகூடல் பட்டி என்னும் சிற்றூரில் பிறந்தார். திரைப்படப் பாடலாசிரியயாகவும், தமிழக அரசவைக் கவிஞராகவும் விளங்கினார். இயேசு காவியம், அர்த்தமுள்ள இந்து மதம், மாங்கனி, ஒரு கவிஞனின் கதை போன்ற நூல்களைப் படைத்துள்ளார். சாகித்திய அகாதெமி விருது பெற்ற இவர் 1981 ஆம் ஆண்டு அக்டோபர் 17 இல் மரணம் அடைந்தார்.

இக்குறிப்பின் அடிப்படையில் தன்விவரப்பட்டியல் தயார் செய்வோம்.

**தன்விவரப்பட்டியல்**

| | | |
|---|---|---|
| பெயர் | : | கவியரசர். கண்ணதாசன் |
| பிறந்த தேதி | : | 24-06-1927 |
| பெற்றோர் | : | சாத்தப்பனார் - விசாலாட்சி |
| முகவரி | : | சிறுகூடல் பட்டி, சிவகங்கை மாவட்டம், தமிழ்நாடு. |
| பணி | : | திரைப்படப் பாடலாசிரியர், தமிழகஅரசவைக் கவிஞர் |
| நூல்கள் | : | இயேசு காவியம், மாங்கனி, அர்த்தமுள்ள இந்து மதம், ஒரு கவிஞனின் கதை |
| விருது | : | சாகித்திய அகாதெமி விருது |
| இறப்பு | : | 17-10-1981 |

- கவிஞர். வைரமுத்து அவர்கள் 1953 ஆம் ஆண்டு ஜூலை 13 ஆம் தேதி ராமசாமி - அங்கம்மாள் தம்பதியினருக்கு மகனாகப் பிறந்தார். தமிழகத்தில் தேனி மாவட்டத்திலுள்ள வடுகப்பட்டி இவரின் சொந்த ஊராகும். கவிஞராகவும் திரைப்படப் பாடலாசிரியராகவும் சிறந்து விளங்குகிறார். தண்ணீர் தேசம், வில்லோடு வா நிலவே, கருவாச்சிக் காவியம், கள்ளிக்காட்டு இதிகாசம் போன்ற நூல்களை எழுதியுள்ளார். இவருக்கு பத்மஸ்ரீ , தேசிய விருது, கலைமாமணி போன்ற விருதுகள் கிடைத்துள்ளன. இக்குறிப்பின் அடிப்படையில் தன்விவரப்பட்டியல் தயாரியுங்கள்.

<u>தன்விவரப்பட்டியல்</u>

- தயார் செய்த தன்விவரப் பட்டியலைக் குழுவில் கலந்துரையாடி மேம்படுத்தி வகுப்பறையில் வெளியிட்டு படைப்புத்தொகுப்பில் இணைப்போம்.

# இரசனைக்குறிப்பு

ஓர் இலக்கியத்தில் பல்வேறு இலக்கியக் கூறுகள் காணப்படும். இலக்கியக் கூறுகள் இலக்கியத்தில் எவ்வாறு இடம்பெற்றுள்ளன என்பதை இரசனையோடு வெளியிடும் ஒரு மொழி வெளியீட்டு வடிவமே இரசனைக் குறிப்பு.

இரசனைக்குறிப்பில் இடம் பெற வேண்டியவை

- ஓர் இலக்கியத்தில் காணப்படும் கலைத்தன்மை மற்றும் அழகினைப் பற்றி ஆராய்வது.
- சொல்நயம், பொருள் நயம், உணர்ச்சி, உவமை, உருவங்கள், வடிவங்கள் போன்ற பகுதிகளை உள்ளடக்கியது.
- கவிதையின் எளிமைத்தன்மை இரசனைக்கு உட்படுத்தப்படுகிறது.
- பின்வரும் கவிதைக்கான இரசனைக் குறிப்பு தயார் செய்வோம்.

"நீலக்கடலோரம்
கருத்தம்மா அழுதகுரல்
காயம் சுமந்து வந்தாய்
மனப்புண் தழும்பாக
ஏசுதாஸ் சிந்தும் இசையமுதில்
கரைந்து கரைந்தெம்மைக்
காணாமல் போக வைத்தாய்"

மையக்கருத்து

மலையாளக் கரையோரம் என்ற கவிதையின் ஆசிரியர் சிற்பி. பாலசுப்பிரமணியம் அவர்கள் எழுதிய மலையாளக் காற்றே வா! எனும் கவிதையில் கேரளாவின் சிறப்புகளைக் குறிப்பிடுகிறார். தகழி சிவசங்கரன் பிள்ளை எழுதிய செம்மீன் என்ற நாவலின் கதாபாத்திரம் கருத்தம்மா. அந்நாவல் மலையாள இலக்கியத்தில் முக்கியமாக இடம்பிடித்துள்ளது.எனவே அக்கதையை இங்கே குறிப்பிட்டுள்ளார். பாடகர் ஏசுதாஸ் தன் அழகியப் பாடல்களால் நம் அனைவரின் இதயங்களைக் கவர்ந்தவர். அவரைத் தந்ததும் கேரளமேயாகும். இவ்வாறு கேரளத்துச் சிறப்புகள் இதில் குறிப்பிடப்பட்டுள்ளன.

சொல்நயம்

இக்கவிதை வரிகளில் கருத்தம்மா, காயம், கரைந்து, காணாமல் போன்ற மோனைநயம்மிக்கச் சொற்கள் இடம்பெறுகின்றன. இக்கவிதையின் அனைத்துச் சொற்களும் நயத்தோடு அமைந்துள்ளன. கரைந்து கரைந்து என்ற அடுக்குத்தொடரும் இக்கவிதையில் இடம்பெற்றிருப்பதைக் காணலாம்.

ஓசைநயம்

ஒவ்வொரு வரிகளிலும் ஓசைநயம் இடம்பெற்றுள்ளதைக் காணமுடிகிறது. கானராகக் கந்தருவன், கரைந்து கரைந்தெம்மை போன்ற வரிகளும் காயம் சுமந்து வந்தாய், காணாமல் போக வைத்தாய் ஆகிய வரிகளும் படிக்கும் பொழுது ஒத்த ஓசை நயத்துடன் இடம்பெறுகின்றன. இக்கவிதை வாசிப்பதற்கும் புரிந்துக் கொள்வதற்கும் ஏற்ற மிகுந்த அழகோடு விளங்குகிறது என்றால் மிகையல்ல.

- பின்வரும் பாடலில் உள்ள எதுகை, மோனை, இயைபு ஆகிய நயங்களை எடுத்து எழுதுவோம்.

தமிழ் எங்கள் உயிர் என்பதாலே - வெல்லுந்
தரமுண்டு தமிழருக்கு இப்புவி மேலே
தமிழ் என்னில் எம்முயிர்ப் பொருளாம் - இன்பத்
தமிழ்குன்று மேல் தமிழ்நாடெங்கும் இருளாம்
தமிழுண்டு தமிழ் மக்களுண்டு - இன்பத்
தமிழுக்கு நாளும் செய்வோம் நல்ல தொண்டு

மோனை : தமிழ் - தரம்
...........
...........
...........

எதுகை : ...........
...........
...........

இயைபு ...........
...........
...........

- கீழ்வரும் பாடலுக்கு இரசனைக்குறிப்பு எழுதுவோம்.

"வைகை பெருகிவரப்
பெரியாற்றில் தேங்கிநின்றாய்
கோவை களைப்பாறச்
சிறுவாணியால் விசிறினாய்
பறம்பிக் குளத்தால் நெஞ்சில்
பச்சைப் பிடிக்க வைத்தாய்
இத்தனையும் செய்தாய்
மலையாளப் பூங்காற்றே
என்ன கைம்மாறு செய்தோம்?"

இரசனைக் குறிப்பு

◆ தயார் செய்த இரசனைக் குறிப்பைக் குழுவில் கலந்துரையாடி மேம்படுத்தி வகுப்பறையில் வெளியிட்டுப் படைப்புத்தொகுப்பில் இணைப்போம்.

# நூலடைவு

ஒரு நூலைப் பற்றிய சுருக்கமான பார்வையே நூலடைவாகும்.

நூலடைவில் இடம்பெற வேண்டியவை

- அனைத்து நூல்களிலும் அட்டைப்பக்கத்தில் நூலடைவு இடம்பெற்றிருக்கும். (மாணவர்கள் நூலகத்திற்குச் சென்று நூல்களிலுள்ள நூலடைவினை நேரடியாகக் காண்பது சிறப்பு)
- நூலின் பெயர், ஆசிரியர், நூல் வகை, பதிப்பகம், வெளியிட்ட ஆண்டு, பக்கங்கள், விலை என்ற வரிசை முறையில் நூலடைவு அமைய வேண்டும்.
- நூலடைவின் வரிசை முறையை மாற்றி அமைப்பது சிறப்பாக இருக்காது என்பதை உணர்ந்து எழுதுதல் நல்லது.
- பத்தியாகக் கொடுக்கப்பட்டிருக்கும் நூலைப் பற்றியச் செய்திகளை நூலடைவு வரிசையில் எழுதுதல் வேண்டும்.

- சிவகாமியின் சபதம் என்ற நூலை கல்கி எழுதியுள்ளார். இது சரித்திர நாவலாகும். சென்னையிலுள்ள விகடன் பிரசுரம் என்ற பதிப்பகத்தால் 2021 ஆம் ஆண்டு 23 வது பதிப்பாக வெளிவந்துள்ளது. இதன் விலை 900 ரூபாய் ஆகும். இந்நாவலின் மொத்தப் பக்கங்கள் 452 ஆகும். இதற்கான நூலடைவினைத் தயார் செய்வோம்.

## நூலடைவு

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | சிவகாமியின் சபதம் |
| ஆசிரியர் | : | கல்கி |
| நூல்வகை | : | சரித்திர நாவல் |
| பதிப்பகம் | : | விகடன் பிரசுரம், சென்னை |
| பதிப்பித்த ஆண்டு | : | 2021 (23 ஆம் பதிப்பு) |
| பக்கங்கள் | : | 452 |
| விலை | : | ரூபாய். 900 |

- அஞ்ஞாடி என்னும் நாவலை பூமணி அவர்கள் எழுதியுள்ளார். 2014 ஆம் ஆண்டு சென்னையிலுள்ள திருவள்ளுவர் பதிப்பகம் இந்நாவலை வெளியிட்டுள்ளது. 1066 பக்கங்களைக் கொண்ட இந்நூலின் விலை 350 ரூபாய் ஆகும். இது சாகித்திய அகாதெமி விருது பெற்ற நாவலாகும். இதற்கான நூலடைவினைத் தயாரியுங்கள்.

| நூலடைவு |
|---|
| |

- தயார் செய்த நூலடைவைக் குழுவில் கலந்துரையாடி மேம்படுத்தி வகுப்பறையில் வெளியிட்டு படைப்புத்தொகுப்பில் இணைப்போம்.

# கட்டுரை

ஒரு பொருண்மையைப் பற்றிய கருத்துகளை காரண காரணத்தோடு அலசி ஆராய்ந்து விரிவாகவும் தெளிவாகவும் வெளியிடும் ஒரு மொழி வெளியீட்டு வடிவமே கட்டுரை

கட்டுரை எழுதும்போது கவனிக்க வேண்டியவை

- முன்னுரை, முடிவுரை, துணைத்தலைப்புகள் போன்றவை அமைத்து எழுத வேண்டும்.
- முன்னுரையில் கட்டுரை அமைய இருக்கும் கருத்துகள் அல்லது பொருள் குறித்த அறிமுகமாக அமைய வேண்டும்.
- தலைப்பிற்குப் பொருத்தமான துணைத்தலைப்புகள், கருத்தோடு பொருத்தமுடையதாக இருத்தல்வேண்டும்.
- மேற்கோள்கள் இடம் பெற்றால் கட்டுரையின் அமைப்பு மிகச் சிறப்பாக இருக்கும்.
- மேற்கோள் கட்டுரையின் பொருள் விளக்கத்திற்கு ஏற்றதாக அமைதல் வேண்டும்.
- முடிவுரையில் கட்டுரையின் ஒட்டு மொத்த கருத்துகளும் சுருக்கமாகக் கூறும் நிலையில் அமைக்க வேண்டும்.
- எழுத்துப்பிழை, கருத்துப்பிழை, வாக்கியப்பிழைகள் இல்லாமல் இருக்க வேண்டும்.
- சிறுசிறு வாக்கிய அமைப்பாக இருப்பது நல்லது.
- தெளிவான மொழிநடையில் கட்டுரை அமைவது சிறப்பு.

  - "அறிவியல் தமிழ்" என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுவோம்.

## அறிவியல் தமிழ்

முன்னுரை

"வானையளப்போம் கடல் மீனை அளப்போம்
சந்திர மண்டலத்தியல் கண்டு தெளிவோம்"

என்றார் பாரதியார். காலந்தோறும் வளர்ச்சிக்குரியது மொழி. அவ்வாறு வளர்ச்சி அடையும் மொழியே நிலைத்து நிற்கும். அறிஞர்களால் பாராட்டப்பட்ட நம் தமிழ்மொழி கால்டுவெல்லையும் போப்பையரையும் வீரமாமுனிவரையும் தன்பால் ஈர்த்தது. அந்தத் தமிழ் மொழி இயல்தமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ் , அறிவியல் தமிழ் என இன்று வளர்ந்துள்ளதைக் காண முடிகிறது.

.

அறிவியல் வளர்ச்சி

உயிரினத்தில் மனிதனே தலைமுறைதோறும் அறிவு வளர்ச்சி பெறும் ஆற்றலைப் பெற்றுள்ளான். இதனைத் திருவள்ளுவர்,

"தம்மின் தம்மக்கள் அறிவுடைமை"

என்று கூறியுள்ளார். அமெரிக்கா, பிரான்சு, இங்கிலாந்து, இத்தாலி, ரஷ்யா, ஜெர்மனி ஆகிய நாடுகளில் உலகு வியக்கும் அறிவியல் கண்டுப்பிடிப்புகள் நடந்துள்ளன. இந்தியாவிலும் ஜகதீஷ் சந்திரபோஸ், சர்.சி.வி இராமன், சந்திரசேகர் போன்ற அறிவியல் மேதைகள் அரிய ஆக்கங்களைக் கண்டுப்பிடித்துள்ளனர். இந்நிலையில் அறிவியலின் வளர்ச்சி நிலையோடு தமிழும் வளர்ச்சி பெற்றுள்ள நிலையினைக் காணலாம்.

"சென்றிடுவீர் எட்டுத்திக்கும்
கலைச்செல்வங்கள் யாவும்
கொணர்ந்திங்கு சேர்ப்பீர்"

என்று பாரதி தன் வேட்கையினை வெளிப்படுத்தினார். ஆட்சியியல், மருத்துவம், பொறியியல், சட்டவியல், வேளாணியல், தொழில்நுட்பம், வானியல், செயற்கைக்கோள், கணினியியல், இணையதளம் போன்ற துறைகளில் அறிவியல் கலைச்சொற்கள் உருவாக்கப்பட்டு தமிழை அறிவியலோடு இணைந்து வளரும் நிலையைக் காணலாம்.

கணினித் தமிழ்

அறிவியல் உலகை கணினி உலகமாக மாற்றிய பெருமை கணினிக்கு உண்டு. ஆரம்ப காலத்தில் கணக்குப் போடுவதற்கு மட்டுமே பயன்படுத்தப்பட்ட கணினி இன்று மக்கள் வாழ்வின் அனைத்து நிலைகளிலும் தன்னைப் பதிவு செய்து வருகின்றது. கணினிக் கல்வி கற்காதவன் கல்லாதவன் ஆவான். முத்தமிழ் இன்று கணினியோடு இணைந்து நற்றமிழாக வளர்ச்சி அடைந்துள்ளது.

இணையத்தமிழ்

கணினி உலகை உள்ளங்கைக்குள் கொண்டு வந்த பெருமை இணையத்திற்கு உண்டு. இதனைத் 'தகவல் வலையம்' என்று கூறுவர். இன்று ஆங்கிலத்திற்கு அடுத்த நிலையில் இணையதளத்தில் தமிழ்ப் பயன்பாட்டு மொழியாக வலம் வந்து கொண்டிருக்கிறது. தொன்மை மொழிகளில் தமிழுக்கு மட்டுமே இவ்வாய்ப்பு உண்டு. தமிழ், இணையதளத்தில் பயன்படுத்துவதற்கு இலகுவான மொழியாக அமைந்துள்ளமை மகிழ்ச்சியை அடைய வைக்கிறது.

"நாளும் இன்னிசையால் தமிழ்ப் பரப்பிய ஞானசம்பந்தன்" போல் நாளும் இணையத்தால் தமிழ் உலக நாடுகள் முழுவதும் பரவி வருகின்றது என்றால் அது மிகையில்லை.

முடிவுரை

ஏடுகளில் இருந்த தமிழ் இன்று அறிவியலின் வளர்ச்சியால் அனைவராலும் பயிலக்கூடிய நிலைக்கு உயர்ந்துள்ளது. இன்று அனைத்து துறைகளும் தமிழ் வழியில் பயிலுவதற்கான வாய்ப்பு ஏற்பட்டுள்ளதைக் காணமுடிகிறது. "மெல்ல தமிழ் இனிச் சாகும்" என்ற நிலை மாறி அறிவியலால் " மெல்ல தமிழ் இனி ஓங்கும்" என்ற நிலை உருவாகியுள்ளது என்பதே உண்மை.

- "வேற்றுமையில் ஒற்றுமை" என்னும் தலைப்பில் கட்டுரை தயார் செய்யுங்கள்.

குறிப்பு : முன்னுரை – ஒருமைப்பாட்டு உணர்வு – பண்பாட்டுத் துணை – ஒருமைப்பாடு வளர வழிகள் – முடிவுரை

வேற்றுமையில் ஒற்றுமை

முன்னுரை

நம் நாடு பல்வேறுபட்ட கலாச்சாரங்களையும் மொழிகளையும் மதங்களையும் இனங்களையும் கொண்ட நாடு.

ஒருமைப்பாட்டு உணர்வு

பண்பாட்டுத் துணை

ஒருமைப்பாடு வளர வழிகள்

முடிவுரை

- தயார் செய்த கட்டுரையைக் குழுவில் கலந்துரையாடி மேம்படுத்தி வகுப்பறையில் வெளியிட்டுப் படைப்புத் தொகுப்பில் இணைப்போம்

# விமர்சனம்

விமர்சனம் என்பது ஒரு கருத்தை, படைப்பை, படைப்பின் கதாபாத்திரத்தை மதிப்பீடு செய்து முன் வைக்கப்படும் கருத்து நிலையாகும். ஒரு படைப்பை விமர்சனம் செய்யும் பொழுது ஒருசார்பு நிலையில் அமையாமல் நடுநிலையோடு விருப்பு வெறுப்பற்ற மனநிலையோடு செய்தல் வேண்டும். படைப்பின் மீது விமர்சனம் செய்யும் நபர் முன்வைக்கும் கருத்து என்பது அவரின் பார்வையாகவே அமையும்.

விமர்சனம் செய்யும் முறை

- படைப்பினை தற்காலச் சூழலோடு பொருத்திப் பார்க்கும் முறை
- படைப்பின் சமூக, அரசியல், கால பண்பாட்டுப் பிண்னனியும் அறிந்து விமர்சனம் செய்ய வேண்டும்.
- சிறுகதையினை விமர்சிக்கும் பொழுது மையக்கருத்து, கதாபாத்திரங்கள், கதை உத்தி, மொழிநடை போன்ற கருத்துகளின் அடிப்படையில் விமர்சனம் செய்வது மிகச் சிறப்பாக அமையும்.
- கதையின் அல்லது படைப்பின் நிறை, குறைகளைத் தகுந்த முறையோடு எடுத்துக்கூற வேண்டும்.
- எக்காரணங்கொண்டும் படைப்பாளியினை மத, இன, மொழி, சாதி அடிப்படையில் சாடுதல் கூடாது.
- படைப்பையும் படைப்பாளியையும் தரம் தாழ்த்திக் கருத்துக்களை வெளியிடுதல் கூடாது.

கதை விமர்சனம்

- சிறுகதை என்பது ஒரு மையக் கருவினை அல்லது நிகழ்ச்சியின் அனுபவத்தை விவரிக்கும் இலக்கிய வகையாகும். சிறுகதை விறுவிறுப்பாய்த் தொடங்கி அதன் தொடர்ச்சியில் நெகிழ்ச்சியில்லாமல் இயங்கி உச்ச நிலைக்குச் சென்று முடிவு வரை படிப்பவரின் கவனத்தை ஒருமுகப்படுத்த வேண்டும்.

விமர்சனத்தின் முக்கிய கூறுகள்

- மையக்கருத்து
- பாத்திரப்படைப்பு
- கதைக்களம்
- உத்திகள்
- மொழிநடை

மையக்கருத்து

ஒவ்வொரு சிறுகதையும் ஒரு மையக் கருத்தின் அடிப்படையில்தான் எழுதப்பட்டிருக்கும். அந்தக் கருத்தினைக் கண்டறிந்து மிகச் சுருக்கமாகவும் தெளிவாகவும் எழுத வேண்டும்.

## கதாபாத்திரம்

ஒரு படைப்பு என்ற நிலையில் முன்னிலை வகிப்பது பாத்திரங்களே ஆகும். சிறிய கதை என்பதால் தேவையற்ற பாத்திரங்கள் தவிர்க்கப்பட்டு தேர்ந்தெடுத்த பாத்திரங்களே இடம்பெறுகின்றன. முதன்மைக் கதாபாத்திரத்தை வரையறுத்துக் கொள்வது மிக இன்றியமையாததாகும். முதன்மைப் பாத்திரத்தை நோக்கி வாசகனின் கவனம் செல்ல வேண்டும். கதாபாத்திரத்தின் பண்பு நலன்களை எடுத்துக் கூறும் வகையில் விமர்சனம் அமைதல் நன்று.

## கதைக் களம்

கதை நடக்கும் சூழல் காலம் ஆகியவையே கதைக்களம். கதையின் மையக் கருவையும் கதாபாத்திரங்களையும் ஒரு வாழ்க்கைச் சூழலில் நம்பகமாகப் பொருத்திக் காட்டுவது கதைக்கு மிகவும் அவசியம். கதையினை நாம் விமர்சனம் செய்கின்றபோது கதை எங்கே நடக்கிறது எப்போது நடைபெறுகிறது எவ்வளவு காலம் நடைபெறுகிறது ஆகிய வினாக்களுக்கு விடையளிக்கும் வகையில் அமைய வேண்டும்.

## உத்திகள்

ஒரு சிறுகதை கதை கூறும் கோணத்திலும் சிறந்திருக்க வேண்டும். கதை கூறும் நோக்கத்தை நோக்குநிலை உத்தி என்று கூறுவர். குறிப்பிட்ட ஒரு நிகழ்ச்சியை ஆசிரியர் எந்த கோணத்திலிருந்து பார்க்கிறார் என்பது முக்கியம். ஆசிரியர் நோக்கு, பாத்திர நோக்கு என்று நோக்குநிலை பல வகைப்படும்.

நனவோடை முறை என்பது வாசகர்களைச் சுண்டி இழுக்கும் ஒரு உத்தியாகவே கருதப்படுகிறது. உள் மனதின் எண்ணங்களை அலையாகக் கிளப்பிவிட்ட நிலை அவற்றிற்குச் சொல் வடிவம் தருவதே நனவோடை உத்தி என்று கூறலாம். பின்னால் நிகழ இருப்பதை முன் உணர்த்துவதும் முன் நிகழ்ந்தவற்றைப் பின் உணர்த்துவதுமாகிய முன்னோக்கு உத்திகளும் பின்னோக்கு உத்திகளும் உள்ளன. நமது பாடப்பகுதியில் இடம்பெறும் கதைகளை விமர்சனம் செய்யும் வேளையில் உத்திகளைப் பற்றிய புரிதல் வேண்டும்.

## மொழிநடை

மொழிநடை என்பது ஆசிரியருக்கே உரிய தனித்திறன் ஆகும். "நடை என்பது ஒரு ஆசிரியரின் மேற்சட்டை போன்றது அன்று. உடம்பின் தோல் போன்றது" என்று கூறுவார்.கார்லைல். பொதுவாக தமிழில் தூய தமிழ் நடை, கிண்டலும் எள்ளலும் நகைச்சுவையும் நிரம்பிய நடை, ஆற்றொழுக்கான நடை, பேச்சுத்தமிழ் நடை, வட்டார வழக்கு நடை என்று பல வகைகள் உள்ளன. அதில் நாம் விமர்சனம் செய்யும் சிறுகதை எந்த நடையில் எழுதப்பட்டுள்ளது என்பதைச் சுட்டிக்காட்டி தகுந்த உதாரணங்களுடன் எழுத வேண்டும்.

◆ ஜெயகாந்தன் அவர்கள் எழுதிய 'சுமை பேதம்' என்ற கதையினை விமர்சனம் செய்து எழுதுவோம். (முழுமைப்படுத்துவோம்)

| |
|---|
| மையக்கருத்து<br><br>"செய்யும் தொழிலே தெய்வம்" என்ற பொன்மொழிக்கு ஏற்ப இக்கதையின் மையக்கருத்து அமைந்துள்ளது. எந்த தொழிலும் இழிவானது அல்ல என்பதை வலியுறுத்துகிறது.<br><br>பாத்திரப்படைப்பு<br><br>கதைக்களம்<br><br>சென்னை நகரத்தில் ஒதுக்குப்புறமான, சமூக, பொருளாதார நிலையில் பின்தங்கிய மக்கள் வாழ்கின்ற பகுதிகளே இக்கதையின் கதைக்களமாக அமைந்துள்ளது. கதை, தொடக்கம் முதல் முடிவு வரை ஒரு வாரத்திற்குள் நிகழ்ந்த நிகழ்வுகளை ஆசிரியர் கோர்வையாகப் படைத்துள்ளார்.<br><br>கதை உத்தி<br><br>மொழிநடை |

◆ தயார் செய்த கட்டுரையைக் குழுவில் கலந்துரையாடி மேம்படுத்தி வகுப்பறையில் வெளியிட்டுப் படைப்புத் தொகுப்பில் இணைப்போம்.

# சொற்பொழிவுரை

ஒரு பொருண்மையில் பேச விரும்பும் கருத்துகளைத் தொகுத்து விரிவாக உரைக்கும் நிலையில் அமைவதே சொற்பொழிவு என்னும் மொழி வெளியீட்டு வடிவம்.

சொற்பொழிவு தயார் செய்யும் முறை

- தகவல்களைத் திரட்டுதல்.
- திரட்டிய தகவல்களைப் பகுப்பாய்வு செய்தல்.
- பொருத்தமான மேற்கோள்களைக் கண்டறிதல்.
- அவைக்கு வணக்கம் மற்றும் நன்றியைக் கூறி முகமன் இடம்பெறும் வகையில் அமைதல்.
- அவையில் பேசத் தகுந்த மொழிநடையைக் கையாண்டு திரட்டிய தகவல்களைக் கோர்வையாகத் தொகுத்து எழுதுதல்.

சொற்பொழிவின் முக்கிய கூறுகள்

- முகமன் கூறுதல்
- கருத்துகள்
- மேற்கோள்
- மொழிநடை

- "அம்பேத்கரின் அரும்பணி" என்ற தலைப்பில் சொற்பொழிவுரையைத் தயார் செய்வோம்.

**அம்பேத்கரின் அரும்பணி**

இருளை அகற்றி அறிவு ஒளியை ஊட்டும் ஆசிரியப் பெருமக்களே! ஒளிரும் நட்சத்திரங்களைப் போன்று மின்னிக் கண்சிமிட்டும் மாணவர்களே! உங்கள் அனைவருக்கும் என் முதற்கண் வணக்கம்.

நான் இங்கு அம்பேதகரின் அரும்பணி என்ற தலைப்பில் சில கருத்துக்களைக் கூற விழைகிறேன். மராட்டிய மாநிலம் கொங்கண் மாவட்டத்தில் தபோலி என்னும் சிற்றூரில் பிறந்த பீமாராவ் என்ற சிறுவனுக்கு பள்ளியில் பயிலும் காலத்திலே தன் சக மாணவர்களுடன் சரிசமமாக உட்கார அனுமதி மறுக்கப்பட்டது. அச்சிறுவயதிலிருந்தே தீண்டாமையின் கொடுமையை அனுபவித்து வரத்தொடங்கினான். அச்சிறுவன்தான் ஐம்பது ஆண்டுகளுக்குப் பின் 1947 ஆம் ஆண்டு மிடுக்கான உடை அணிந்து மாமனிதராக நாடாளுமன்றத்தில் வந்து நின்ற டாக்டர். அம்பேத்கர் என்றால் மிகையாகாது. அவர் கைகளில் இந்தியாவின் எதிர்காலத்தையே உருவாக்கும் இந்திய அரசியல் அமைப்பு

சாசன சட்ட வரைவு இருந்தது. அவர் சமுதாய மறுமலர்ச்சியின் முன்னோடி. பல்வேறு மத, இன, மொழி, சமூகப் பழக்கவழக்கங்கள் கொண்ட நமது நாட்டை இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தால் ஒருங்கிணைத்தவர்.

அம்பேத்கர் இலண்டனில் பாரிஸ்டர் பட்டம் பெற்றுத் திரும்பிவந்து வழக்கறிஞராக ஏழைகளுக்குக் கட்டணமின்றி வழக்காடி நீதியையும் பெற்றுத் தந்து மாதிரியானார். அறியாமைதான் அனைத்திற்கும் மூலகாரணம் என்பதை நன்குணர்ந்தவர். எனவே,

**"தகரென்று கொட்டு முரசே - பொய்ம்மை**
**சாதி வகுப்பினை யெல்லாம்"**

என முரசு கொட்ட அறைகூவல் விடுத்த தேசியகவி பாரதியாரைப் போன்று "சாதி களையப்பட வேண்டிய களை" என்று அவர் கருதினார். சமூக மாற்றத்திற்குச் சிந்தனை விதைகளைத் தூவுகின்ற புரட்சிகளாலேயே இந்த வையகம் வாழ்கிறது என்றார். இந்தியர்களின் நலத்திற்கும் மகிழ்ச்சிக்கும் சாதி என்னும் நோய் தீங்கு விளைவிக்கிறது என்பதை உணரும்படி செய்துவிட்டால் போதும் என்றார். ஜனநாயகம் என்றால் என்ன? எல்லா மனிதர்களையும் ஒரே மாதிரியாக நடத்துவதே சமத்துவமாகும் என ஜனநாயகத்திற்கு விளக்கம் தந்தார். ஜனநாயகத்தின் மறுபெயர்தான் சகோதரத்துவம்.

அம்பேத்கர் ஓர் அறிவுச் சுரங்கம். இவர் அறியாமையை நீக்க ஆற்றிய பணிகள் மகத்தானவை. அண்ணல் அம்பேத்கர் தன்னலமற்றவர். மிகவும் ஆர்வத்துடனும் விரைந்தும் தன்னந் தனியாகச் செயல்பட்டவர். தமக்குக் கொடுக்கப்பட்ட பணியில் கருமமே கண்ணாக இருந்தவர் என்று இந்தியாவின் முதல் குடியரசு தலைவர் டாக்டர். இராஜேந்திர பிரசாத் அவர்களால் பாராட்டப் பெற்றவர். நாட்டிற்காக அயராது உழைத்த அண்ணல் அம்பேத்கர் 1956 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 6 ஆம் நாள் புகழுடம்பு எய்தினார்.

இந்திய அரசு பாரத ரத்னா என்னும் உயரிய விருதை 1990 ஆம் ஆண்டு வழங்கிப் பெருமைப்படுத்தியது. இந்திய நாட்டின் ஒளிமிகுந்த எதிர்காலத்தைப் பற்றி கனவு கண்ட இலட்சிய மனிதர் இவராவார். தாம் கண்ட இலட்சிய கனவுகளை அறிவுத் திறத்தினால் உறுதிப்படுத்தியவர். கல்வி அறிவின்றி நாடு முன்னேற முடியாது என்று உரைத்தவர். சமுதாயத்தில் புறக்கணிக்கப்பட்ட மக்களுக்காகத் தம்மை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டவர்.

என்றும் அழியா புகழுடன் நம் நினைவில் வாழும் அண்ணல் அம்பேத்கரை ஒருமுறை கூட புகழாரம் சூட்ட வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி என் உரையை முற்றுரையாக்கி விடை பெறுகிறேன் நன்றி வணக்கம்.

- "மக்கள் வாழ்வில் கலைகளின் பங்கு" என்ற தலைப்பில் சொற்பொழிவு தயார் செய்யுங்கள்.

| |
|---|
| மக்கள் வாழ்வில் கலைகளின் பங்கு |

- தயார் செய்த கட்டுரையைக் குழுவில் கலந்துரையாடி மேம்படுத்தி வகுப்பறையில் வெளியிட்டுப் படைப்புத் தொகுப்பில் இணைப்போம்.